# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 09.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 16959/SCIC/2022**

திரு.இரா. இரவிச்சந்திரன்
எண். 11/222, சக்தி ஸ்ரீ நகர் — மேல்முறையீட்டாளர்
கீழ்மருவத்தூர், மேல்மருவத்தூர் அஞ்சல்
செய்யூர் வட்டம், செங்கல்பட்டு - 603 319.

//எதிர்//

1.பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
கோட்டாட்சியர் அலுவலகம்
மதுராந்தகம் கோட்டம், செங்கல்பட்டு மாவட்டம்
2. பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 28.04.2022 |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 06.06.2022 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 29.08.2022 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 22.09.2022 |
| 5 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 04.11.2023, 21.01.2025 & 11.04.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 08.05.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செய்யூர் வட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “செய்யூர் வட்டாட்சியர் அலுவலகத்தின் தொலைபேசி எண்.27531144 நடைமுறையில் செயல்படுகிறதா என்ற விபரம் தகவலாக வழங்கவும்” என்பன போன்று 15 (பதினைந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. **இன்றைய (09/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.E.பெருமாள், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மதுராந்தகம் கோட்டம் மற்றும் திரு.கோ.முத்து, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள். பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தெரிவிக்கையில் மனுதாரருக்கு 29/08/2022, 04/11/2023, 21/01/2025 மற்றும் 11/04/2025 தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 08/05/2025 தேதியிட்டு, தனது ஆட்சேபணை மனுவை ஆணையத்திற்கு அனுப்பி அதில், இனங்கள் 1,2,6,8 ஆகியவற்றிற்கு முழுமையற்ற, தவறான தகவல்களை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்ட தகவல்களை ஆணையம் பரிசீலனை செய்தது. இன்றைய விசாரணையின் போது, மனுதாரர் இனம் 6-க்கான தகவல் சரியானதாக உள்ளது எனத் தெரிவித்து அத்தகவலை ஏற்றுக் கொண்டார். இனங்கள் 1, 2-க்கான தகவல் சரியானதாக இல்லை என ஆணையம் கருதுகிறது. இன்றைய விசாரணையின் போது மனுதாரரின் 08/05/2025 தேதியிட்ட ஆட்சேபணை மனுவின் நகல் பொதுத் தகவல் அலுவலரிடம் அளிக்கப்பட்டு, அவர் இனங்கள் 1, 2 ஆகியவற்றிற்கு, ஆவணங்களின்படியான, மனுதாரர் ஆட்சேபணை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஏற்ப திருத்திய / சரியான தகவலை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர் மனுதாரருக்கு அனுப்பி வைத்த தகவலின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறப்படுகின்ற அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மேலும், இனம் 8-க்கான தகவலைப் பொறுத்த மட்டில், 618 வேட்டிகள் மற்றும் புடவைகள் POS மெஷினில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது, ஆனால் 458 புடவைகள் மற்றும் வேட்டிகள் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 160 வேட்டிகள் மற்றும் புடவைகள் குறைவாக உள்ளது எனத் தெரிவித்து, அதன் மீது நடவடிக்கை எடுத்த அறிக்கை வேண்டுமென்று மனுதாரர் கோரினார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், ஆவணங்களின்படி 458 வேட்டிகள் மற்றும் புடவைகள் மட்டுமே வழங்கப்பட்டது என POS மெஷினில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவலை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இத்தகவலின் மீது மனுதாரருக்கு ஏதேனும் குறைகள் இருப்பின், துறையின் உயர் அதிகாரிகளை அணுகி தீர்வு காண மனுதாரருக்கு ஆணையம் தெரிவித்துக் கொள்கிறது. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

3. **இன்றைய விசாரணையின் போது, மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் அளிக்கும் தகவல் உரிய Format-ல் தகவல் வழங்குவது இல்லை எனத் தெரிவித்தார்.**

**அதனை ஆணையம் பதிவு செய்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர் இனிவருங்காலங்களில், மனுதாரர்களுக்கு அளிக்கும் தகவல் உரிய Format-ல் வழங்க வேண்டுமென்று ஆணையம், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செய்யூர் வட்டம் அவர்களுக்கு அறிவுறுத்துகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**
**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16959/SCIC/2022</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்
கோட்டாட்சியர் அலுவலகம்
மதுராந்தகம் கோட்டம், செங்கல்பட்டு மாவட்டம்

2. பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்

**மேல்முறையீட்டாளர்**

திரு.இரா. இரவிச்சந்திரன்
எண். 11/222, சக்தி ஸ்ரீ நகர்
கீழ்மருவத்தூர், மேல்மருவத்தூர் அஞ்சல்
செய்யூர் வட்டம், செங்கல்பட்டு - 603 319.

RG/PC